உ
சிவமயம்

# சேவையின் வடிவம்



பளை மாசாரில் வாழ்வாங்கு வாழ்ந்து


இறைபதமெய்திய

அமரர்

## சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

அவர்களின்

## வாழ்க்கைப் பதிவேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்







பளை, மாசாரில்

வாழ்வாங்கு வாழ்ந்து இறைபதமெய்திய

அமரர்

# சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

அவர்களின்

# வாழ்க்கைப் பதிவேடு

## 30.04.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வையகத்தில்
எம்மை வாழ்வாங்கு வாழவைக்க
அல்லும் பகலும் அயராது பாடுபட்ட
எங்கள் அன்புத்தெய்வம்
எம்மையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு இறைவனடி
சென்றுவிட்ட அன்னாரை எம்
இதயக்கமலத்தில் நிறுத்தி நெஞ்சுருக
கண்ணீர் மல்கி நெய் விளக்கேற்றிடும்
இவ்வேளையில்
அவரது மறைவு குறித்து வெளியிடும்
இந்நினைவு மலரை அவரது பாதார
விந்தங்களில் வைத்து சமர்ப்பணம்
செய்கின்றோம்.

இங்ஙனம் குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

திருக்குறள்

உருவாய் 1946 02 27



அருவாய் 2016 03 31

மாசர் மனையை சொந்த முகவரியாக கொண்ட

அமரர்

# சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

## திதி நிர்ணய வெண்பா

மன்மத சேர் பங்குனியில் மதி குறையும் அட்டமியில்
நன்மனைதோன் நயவுரைகொள் நாயகனாம் – அன்பு செறி
புகழ்தாமோ தரப் பெயரான் பூதல நீத்தரனடியை
அகமெனவே கொண்டான் அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானே
காதலால் கூப்புவர் தம்கை

# பஞ்சபுராணம்

## தேவாரம்

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து
என் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்
அதி குணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சய சய போற்றி என்றுங்
கைதான் நெகிழவிடேன் உடையா யென்னைக் கண்டுகொள்ளே



## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல் வண்ணற் கருளிப்
பொன் னெடுஞ் சிவிகையா யூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி மிழலை
விண்ணழி செழுங் கோயில்
யோக நாயகனையன்றி மற்றொன்றும்
உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
பவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோனடி
யோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்



இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா ! நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிழல் கொடுத்த நிர்மலன் அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

நிழல் கொடுத்த நிர்மலன் என்று அமரர் தாமோதரம்பிள்ளையை நாம் விழித்தமைக்கு காரணம் இருக்கிறது. தாம் வாழ்ந்த மாசார் கிராமத்திலும் அதை அண்டிய ஏனைய பகுதிகளிலும் மரம் நாட்டக் கூடிய இடம் உண்டோ அங்கெல்லாம் நிழல்மரம் ஒன்றை நாட்டுவதை பொழுது போக்காக அன்றி தமது தலையாய பணியாகக் கொண்டவர் அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள்.

அமரர் ஆகிவிட்ட ஒருவரைப்பற்றிய முக்கிய தகவல்களைத் தாங்கி அவரைப்பற்றி ஏற்கனவே அறிந்திராதவர்களும் ஓரளவு அவரைப்பற்றி அறிந்து கொள்ளும் அளவுக்கு உதவுவதே நினைவு மலர் வெளியீட்டின் நோக்கமாகும். ஒருவர் இறந்த பின் அவரது வாழ்வில் அவர் தீங்கு ஏதும் செய்திருந்தால் அவற்றை மறைத்து அவர் செய்த நல்வினைகளைப் பெரிதுபடுத்தி, அவரை இந்திரன், சந்திரன் என புகழ்ந்து செய்யாத நற்செயல்களை செய்ததாகக் கூறி நயம் பட எழுத வேண்டிய கடமை மலராசிரியருக்கு உண்டு. ஆனால் எந்தவித புனையப்பட்ட செய்திகளும் இன்றி நூறு வீதம் உண்மையான தகவல்களையே வைத்து அவரது வரலாற்றை எழுதக் கூடிய வாய்ப்பு கிடைத்தது என்பாக்கியமே.

நீண்ட காலம் ஒன்றாக பழகிய சமூகத்தில் இருந்து ஒருவர் பிரிந்து வேறோரிடம் செல்ல நேரும் போது அவருக்கு பிரியாவிடை விருந்துபசாரம் செய்வது சமூக வழக்கு. அரச ஊழியர்களுக்கு இது மிகவும் பழக்கமான வைபவமாகும். தற்காலிக பிரிவிற்கு மட்டுமன்றி நிரந்தர பிரிவிற்கும் இது பொருந்தும். அவ்வகையான உள்ளத்தை உருக்கி மனதை நிலைகுலையச் செய்யும் பேரிழப்பை மின்னாமல் முழங்காமல் இடிபோல் வந்திறங்கி அவரை அறிந்த அனைவரையும் துயரம் தோய்ந்த திகைப்பில் அமிழ வைத்திருக்கிறது அமரர் தாமோதரம்பிள்ளையின் நிரந்தர பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுக்கணக்கற்ற அவரது சமூக சேவை பணிகளின் ஒரு சிலவற்றை இங்கே தர எண்ணுகிறோம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். இங்கே நாம் தரும் சில பருக்கைகளைக் கொண்டு அவரை ஏற்கனவே அறிந்திராதவர்கள் அவரைப்பற்றிய ஒரு மேலோட்டமான அபிப்பிராயத்தை பெற்றுக்கொள்ளலாம்.

வீதி ஓரங்கள், ஆலயத்தின் வெளிப்பிரகாரங்கள், சாதாரணமாக மக்கள் கூடும் பேரூந்து தரிப்பிடங்கள் முதலான இடங்களில் நிழல் மரங்கள் நாட்டும் வழக்கத்தை அவர் கொண்டிருந்த காரணத்தால் கொளுத்தும் வெயிலில் வீதி வழி செல்லும் ஆயிரக்கணக்கானோர் பயனடைகிறார்கள். தற்போது மட்டுமன்றி எதிர்காலத்திலும் பல தலைமுறையினர் இந்த மரங்களால் பயனடைவார்கள். பல நூறு ஆண்டுகள் உயிர் வாழ வல்ல தாவரங்களைத் தேர்ந்தெடுத்து அவர் நாட்டி நீர் இறைத்து உய்ய செய்த காரணத்தால் பல நூற்றாண்டு காலம் மக்கள் பயன் பெற வழி சமைத்துள்ளார்.

மரங்களுக்கு அடுத்த படியாக அவரது மனதில் இடம் பிடித்து ஆக்கிரமித்துக் கொண்டவர் மாசார் பிள்ளையார் ஆவர். மாசார் மக்கள் அனைவரது மனதிலும் உறைந்து அவர்கள் வேண்டும் வரம் அருளும் மாசார் விநாயகர் தற்போது உறையும் பாலஸ்தான நிலையினின்றும் மீண்டு புதிதாக அமைக்கப்பட்ட கர்ப்ப கிரகத்துக்குள் எழுந்தருளும் நாளை பூசலான் நாயனார் போல் தினமும் மனக்கண்களால் கண் களித்தவர். அதைத் தவிர அவருக்கு வேறு சிந்தனை கிடையாது.

மாசாரில் புகழ் பெற்ற கிராமத்தலைவர் (விதானையார்) பரம்பரையை சேர்ந்த அமரர் தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம், அமரர் வேலாயுதர் மகேஸ்வரி ஆகியோரின் மகனாகவும் சிவேஸ்வரியின் தம்பியாகவும் இவ்வுலகில் உதித்த அமரர் தாமோதரம்பிள்ளை தமக்கு பின் பிறந்த அமரர் திருநாவுக்கரசு, பாலசுந்தரம் ஆகிய தம்பிமாரோடும் அக்காவோடும் ஆனந்தமாக வாழ்ந்த இளமைக்காலங்களை அவரது அக்கா சிவேஸ்வரி இன்றும் நினைவு கூர்ந்து துயருறுவதை காணும் உறவினர்கள் கண்கலங்குவது காணச் சகிக்காத காட்சியாகும். தாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வரும் ஒன்றாக உட்கார்ந்து ஒரு கோப்பையில் சாதம் பரிமாறி குழைத்து கவளம் ஆக்கி ஒருவருக்கொருவர் பகிர்ந்து உணவுண்ட அந்த பொன் நாட்களை தமக்கையார் நினைவு கூரும் போது உருகாத மனமும் உருகும். சமூகத்தில் அவர் கொண்ட விபரிக்க முடியாத பற்று அவரது வேற்று மொழி அறிவு முதலியன காரணமாக அவர் புகழ் பச்சிலைப் பள்ளியிலும் சுற்றாடலிலும் பெருகுவதை காணச் சகிக்காத பலர் அவரது முயற்சிகளுக்கு பல இடுக்கண்கள் செய்த போதும் அவற்றை பொருட்படுத்தாது கருமமே கண்ணாக தனது பணியை தொடர்ந்தவர் அமரர் தாமோதரம் பிள்ளை.

கம்பீரமான தோற்றம் கொண்டவர் அமரர் தாமோதரம்பிள்ளை அவரது தோற்ற பொலிவும் சமூக சேவை என்கின்ற அவரது முதல் தெரிவுத் துறையின் அவரது முகத்தில் பிரதிபலிக்கும் கம்பீரமும் எவரையும் ஆக்கிரமிக்க வல்ல கருவிகள். அவரிடம் இருந்து உதவி பெறும் சாதாரண சக கிராம வாசி முதல் அவரது தொண்டுள்ளத்துற்கு கட்டுப்பட்டு அவர் கேட்கும் சேவைகளை முகம் கோணாது ஆற்றும் உயர் அதிகாரிகள் வரை அவரது புன்சிரிப்பில் மயங்கிப் போனவர்கள் தாம்.

அமரருக்கு பிடிக்காத வார்த்தைகள் சில உண்டு. நாளைக்கு, பிறகு பார்க்கலாம், என்னால் முடியாது, இப்போ என்ன அவசரம் என்பன அவற்றுள் சில. " ஒன்றே செய்க, ஒன்றும் நன்றே செய்க, நன்றும் இன்றே செய்க, இன்றும் இன்னே செய்க" என்ற ஔவையார் மொழிக்கு உதாரணமாக திகழ்ந்தவர். அவரது சேவை மனப்பான்மைக்கு ஓர் உதாரணம்: அயல்கிராமத்தை சேர்ந்த நண்பர் ஒருவர் அவரிடம் உதவி கேட்டு வருகிறார். வழக்கம் போலவே தாமோதரம்பிள்ளை தமது முழு திறமைகளையும் உபயோகித்து அந்த உதவியை செய்து கொடுக்கிறார். முழு திருப்தியுற்ற வசதி படைத்த அந்த அயல் கிராம நண்பர் உங்களுக்கு கைமாறாக எவ்வளவு கொடுத்தாலும் தகும். எவ்வளவு வேண்டுமோ கேளுங்கள், தருகிறேன் என்ற போது தனது சொந்த தேவைகள் பல பணப்பற்றாக்குறையின் காரணமாக நிறைவேறாத நிலையில் இருந்த போதும் தனக்கென எதுவும் கேளாது மாசார் பிள்ளையார் கோவில் பாவனைக்காக ஓர் ஒலிபெருக்கி சாதனம் வாங்கி தாருங்கள் என்று கேட்ட போது திகைத்துப் போன அந்த நண்பர் ஒலிபெருக்கி சாதனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொடுக்க தவறவில்லை. வைபவரீதியாக இன்னும் அந்த கருவிகள் ஆலய நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்படாத போதும் விரைவில் அன்னாரது குடும்பத்தாரால் அவை ஆலய பரிபாலன சபையிடம் ஒப்படைக்கப் படும் என அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

அவரது சேவைக்கு இன்னுமோர் உதாரணம் எமது கிராமத்தைச் சேர்ந்த முதியவர் பேருந்து ஒன்றினால் மோதுண்டு கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார். அப்போது நிலவிய நாட்டுநிலை காரணமாக பலமாக அடிபட்டு அவருக்கு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் கொண்டு செல்ல முடியாத நிலை - அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். என வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். உதவிக்காக கூட ஒருவர் செல்ல வேண்டும். தயங்கவில்லை தாமோதரம்பிள்ளை போட்டிருந்த உடையுடனே அம்புலன்ஸ் வண்டியில் தானும் ஏறி அமர்ந்து கொண்டு அனுராதபுரம் சென்றது அங்கேயே அமரத்துவம் எய்திட்ட அந்த நோயாளியின் உடலை தகுந்த நீதி விசாரணை முதலியன முடித்து திரும்ப கிளிநொச்சி கொண்டுவந்து உரிய முறையில் இறுதிக்கிரியைகள் நடந்தேற பிரதிபலன் பாராத உதவி புரிந்த அவரது காலடியில் அனுரதைபுரத்தில் மரணித்தவரின் மகன் கண்ணீர் அருவியாய் கொட்ட நின்று கதறி அழுதகாட்சி கல்நெஞ்சையும் உருக்க வல்லது.

அவரது இறுதிக்கிரியையின் போது உரையாற்றிய ஓர் உயர் அரச அதிகாரி அடிக்கடி அவர் எமது காரியாலயத்திற்கு வருவார். கையில் பல பத்திரங்கள் இருக்கும் அவற்றுள் நிச்சயமாக மாசார் பிள்ளையார் கோவில் சம்பந்தமான 2 ஆவணங்களாவது இருக்கம். அவரது சொந்த தேவைக்கான எந்த பத்திரமும் இருக்காது. என்று கூறியது அமரரின் பொது நோக்கு சிந்தனையை வெளிச்சம் போட்டு காட்டும்.

ஆடிமாதம் வந்துவிட்டால் ஆயிரம் பணப்பிரச்சினை இருந்தாலும் அடியார் வினை தீர்க்கும் கதிர்காமக் கந்தனை தரிசிக்க தவறாது சென்று விடுவார். பல தசாப்தங்களுக்கு மன்பு பாதையாத்திரையாக சென்று பணிந்த கதிரமலை உறை முருகனை தவறாது தரிசித்து அங்கிருந்து கொண்டு வரும் விபூதி நூல் என்பவற்றை உறவினர், நண்பர்களுக்கு விநியோகித்து கடல் கடந்து வாழும் தமது ஒரேசகோதரிக்கும் அவரது குடும்பத்தினருக்குமி சேர்ப்பிப்பதை தனது தார்மீகக் கடமையாக கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை தட்டிக் கெட்பவர் தர்மர் செயல்களை தட்டிக்கொடுத்து வளர்ப்பவர். ஏழைகளுக்கு உதவுபவர். தனக்கென வாழாத பிறர்க்குரியவர். சிறுவயதிலேயே இரு மக்களை பறி கொடுத்தவர். எஞ்சிய இரு செல்வங்களுடனும் கரம்பிடித்து உயிர் கலந்த காதல் மனையாள் சரஸ்வதியுடன் கண்டவரெல்லாம் மெய்ச்சும் வகையில் கவிநுறு வாழ்க்கை வாழ்ந்தார். பெற்றெடுத்த செல்வங்களில் சென்றவர் போக சிரேஸ்ட மகள் அனுராதாவுடனும் மைந்தன் வடிவேலுடனும் பேரப்பிள்ளைகளான தினேகா, பவநிதன், கீர்த்திகா, தேனிலவன் அகியோரை கண்ணை இமைகாப்பது போல் காத்து வளர்த்து கடமை முடிந்ததென நின்மதியோடு வாழ்ந்து வரகையில் காலனின் கண்பார்வை எங்கள் காவலன் மேற்பட்டது. வழமைபோல் தனது சைக்கிளில் பனை செல்லும் வழியினுள் மயக்கம் உற்று சாய்ந்த அமரரை அவ்விடத்தில் இருந்தோர் அணைத்து தாங்கி அவர் நாட்டி வளர்த்த மரநிழலிலே வளர்த்தினார்கள். முதலுதவியும் செய்ய மயன்றார்கள். ஆனால் அந்தோ! அமரரது ஆத்மா ஆண்டவன் அடி இணைகளை அடைந்து விட்ட செய்தி தெரியாமல் அம்புளன்சை அழைத்தார்கள். அம்புலன்சும் வந்தது அமரரையும் கொண்டு சென்றது. ஆஸ்பத்திரியிலும் சேர்த்தது. ஆனால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது அமரரின் பூதவுடல்தான் அவரது ஆத்மா அமரர் உலகு எய்திய செய்தி வைத்தியர் கூறித்தான் உறவினருக்கு புரிந்தது. அதன்பின் அனைத்தும் அசுர வேகத்தில் நடந்தேறின மங்கலம் பொங்கும் அமரரின் இல்லம் மரணவீடாக மாறியது. எங்கும் அழுகுரல் எல்லோர் கண்களிலும் அருவி கைப்பிடித்தமனையாள் சரஸ்வதியும் பெற்றெடுத்த அனுராதாவும், வடிவேலும் அவர்தம் வாரிசுகள் தினேகா, பவநிதன், கீர்த்திகா, தேனிலவன், மருமகன் சசிகலா கடலட்கடந்து வாழும் சகோதரி சிவேஸ்வரி அவர்தம் கணவர் அச்சுதம்பிள்ளை மைத்துனிமார் பரமேஸ்வரி, மகேஸ்வரி அனைவரும் மடைநிறைந்த வெள்ளம் போல் கண்ணீர் வாரஅழுது புலம்ப எதையுமே தனது கவனத்திற் கொள்ளாது தன் உலக விநாயகனும், திரியாய் உறை அம்மனும், வாணன்பதி அம்பிகையும் வழிகாட்டிச் செல்ல இறைவன் அடி அடைந்து நிரந்தரபேரின்பத்தில் அமிழ்ந்திருக்கும் அமரர் தாமோதரம் பிள்ளையினது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!!! சாந்தி !!!

அமரர்களான சகோதரர்கள் திருநாவுக்கரசு பாலசுந்தரம் ஆகியோர் வானுலகிற்கு வருமாறு வரவேற்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவியார் துயரம்

சூடிய என் பூவினை நீ ஏன் பறித்தாய்
சுடர் வீசும் பொட்டினை நீ ஏன் துடைத்தாய்
தேடி வைத்த உன் புகழும் தூய வாழ்வும்
தீஞ்சுவைசேர் சொல்லழகும் மறைந்து மாய
ஓடி யோடி ஊர்மக்கள் உயர்வுக்காக
உழைத்தகரம் உணர்விழந்து நின்றதேனோ
வாடியழும் எமதுறவும் சுற்றத்தாரும்
வடித்த கண்ணீர் அடக்க வழி ஒன்றுகூறாய்.

நாயகனே உன்பிரிவால் வெதும்பி ஏங்கி
நான் சொரியும் விழி நீரை துடைத்தென்னுள்ளம்
தூயவனே தேறவழி ஒன்று காட்டாய்
துன்ப இருள் என்னுள்ளம்தனை விடுத்துப்
போயகல மார்க்கம் ஒன்று காட்டடுவாரார்
புனிதஉளம் கொண்டவனே நீ இல்லாது
சேயிழைநான் நித்த நித்தம் வாடி வாடி
சிறப்பிழந்து வாழ்வதுவும் நீதியாமோ.

## புதல்வி அனுராதா
## புதல்வன் வடிவேலு (குயா) துயரம்

இச்சகத்தினில் எங்கணும் சென்று
தேடினும் உறவாடினும்
நிச்சயம் உனை போலோர் தந்தையை
நேரில் காண்பது சாலுமோ
அச்சம் கொள்வது பேதமையென
கூறுனீர் அறிவூட்டினீர்
உச்சமாம் துயர் தந்தே எங்களின்
உள்ளம் தன்னை உடைத்ததேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள் சசிகலா துயரம்

எங்கிருந்தோ வந்த எனை உந்தன் சொந்த
உதிரத்து உதித்தமகள் போல எண்ணி,
மங்காத புகழ் கொண்ட அருமை மாமா
மனசார என் மீது பாசம் வைத்து
இங்கே நான் சிறப்பாக வாழவைத்தீர்.
இவ்வரிய குடும்பத்தில் சிறப்பு மிக்க
பங்காக எனை ஏற்ற மாமா இன்று
பரிதவிக்க வைத்த தேனோ பிரிந்து சென்றீர்.

## சகோதரி சிவேஸ்வரி துயரம்

தம்பியர்மார இருவரை நான் முன்பிழந்தேன்
தவித்தழுதே கலங்கிடினும் நீயென்னோடு
நம்பிக்கையாய் கடைசிவரை இருப்பாய் என்று
நானிருந்தேன் ஏமாற்றி சடுதியாக
அம்புவியில் எனைத் தனியே வாழவைத்து
ஆதரவாய் இருந்த உன்தன் பிரிவால் ஏங்கி
வெம்பி அழ வைத்திட்டாய் எந்தன் உள்ளம்
வேகுவதை தவிர்ப்பதற்கோர் மார்க்கம் கூறாய்.

## உடன்பிறவாச் சகோதரங்கள் புவனேஸ்வரி, இந்திரேஸ்வரி, குணரட்ணம், நவரட்ணம், ஜீவரட்ணம், துரைரட்ணம், புஷ்பவதி, பாலசுப்பிரமணியம் துயரம்.

உடன் பிறவாச்சகோதரர்கள் என்றே இந்த
ஊர்மக்கள் அறியாத வகையில் சொந்த
உடன் பிறப்பே எனும் வகையில் வாழ்ந்திருந்தோம்
உன்னையே எம் வழிகாட்டியாகக் கொண்டோம்
திடம் கொண்ட எமதண்ணா நீயில்லாது
திகைத்தேங்கி நிற்கின்றோம் தேறுதற்கு
இடமேதும் தெரியாது தவித்தே ஏங்கி
இருக்கின்றோம் மனந்தேற மார்க்கமுண்டோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனர் அச்சுதம்பிள்ளை மைத்துனிமார் பரமேஸ்வரி,
மகேஸ்வரி, பராசக்தி துயரம்

ஊருக்கும் உலகுக்கும் இங்கு வேறு
ஒருவர்க்கும் கிடைக்காத பேறாய் எங்கள்
பேர்பெற்ற மைத்துனனே உனை இழந்து
பெரும் துன்பம் கொண்டுலகில் உழல வைத்து
பார்விட்டு சென்றதுமேன் பலரும் போற்றும்
பகலவனே நீயின்றி இருளே சூழ்ந்து
ஆருள்ளார் எமக்கிங்கெ உதவவென்று
அழுதழுது புலம்புகின்றோம் ஆற்றுவாரார்

## பேரன் தேவிலவன் துயரம்

அப்பப்பா அப்பப்பா என்னருமை அப்பப்பா
அவனியிலே இனி எமக்கு யார் துணைதான் அப்பப்பா
தப்பேதும் நான் செய்த தருணம் எல்லாம் அப்பப்பா
தாய், தந்தை கண்டித்தால் தடுத்திடுவீர் அப்பப்பா.
எப்போதும் உனை எண்ணி ஏங்குகிறேன் அப்பப்பா
ஏன் எம்மை தான்பிரிந்து ஏகலுற்றீர் அப்பப்பா
இப்போது கண்ணீரில் நாம் அமிழ்ந்தி அப்பப்பா
ஏங்கி அழும் நிலை தந்தீர் நீதி இதோ அப்பப்பா

## பேரப்பிள்ளைகள்
## திவ்ணேகா, பவநிதன், கீர்த்திகா துயரம்

அப்பாவை அம்மாவை விடவும் எம்மை
அரவணைத்து வளர்ப்பதிலே நீ முன்னின்றாய்
தப்பாது எம்தேவை அறிந்து செய்து
தருவதிலே மகிழ்வுற்றாய் எங்கள் நன்மை
எப்போதும் சிந்தித்தாய் உனது வாழ்வை
எங்களுக்கே சமர்ப்பணமாய்ஆக்கி நின்றாய்
இப்போது எமைப்பிரிந்து துன்பபாரம்
எம்மீது சுமத்தியது ஏனோ ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசையம்மா சிவக்கொழுந்து துயரம்

எங்களுள் மூத்தவளாய் பிறந்தேயிங்கு
எல்லோரும் கொண்டாடும் மகேஸ்வரியின்
தங்கநிகர் செல்வங்களில் இரண்டாம் செல்வ
தனயனை அவதரித்தாய் எமதூர்முற்றும்
எங்கனுமே உன்சேவை தன்னால்மிக்க
ஏற்றம் நீ பெறக்கண்டு களித்திருந்தேன்.
மங்காத புகழ் கொண்ட மகனே எந்தன்
மனதொடிய எனைப்பிரிந்து சென்றதென்ன

## உடற் கூற்று வண்ணம்

*(பட்டினத்தடிகள் அருளியது)*

ஒருமடமாது மொருவனுமாகி
இன்பசுகந்தரு அன்பு பொருந்தி
உணர்வு கலங்க லொழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலொர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய் வாய் செவி கால்கைகளென்று
உருவமுமாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதரமகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளுமறிந்து
மகளிர்கள் சேனை தரவணையாடை
மண்டப வுந்தி யுதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுதமருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளிநகையூற லிதழி மடவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியிலிருந்து மழலை பொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப
உடைமணியாடை யரைவடமாட
உண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
ஐந்து வயதாகி விளையாடியே
உயர் தரு ஞான குருவுபதேச
முந்தமிழின் கலையுங் கரை கண்டு
வளர்பிறையென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டியமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க
மதன சொருப னிவனென மோக
மங்கையர் கண்டும ருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனது பொறாம லவர் பிறகோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமுதுண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுதலாயி முதுபொருளாகி
இருந்த தனங்களும் வம்பிலிழந்து
மதன சுகந்த விதன மிதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல் விழுந்திரு கண்ணுமிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோத குரோத மடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கையினிலோர் தடியுமாகியே
வருவது போவ தொருமுது கூனு
மந்தியெனுமபடி குந்தி நடந்து
மதியுமழிந்து செவிதிமிர் வந்து
வாயறியாமல விடாமல் மொழிந்து
துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சுமுரர்ந்து வரண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு
கலியுக மீதி லிவர் மரியாதை
கண்டிடுமென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவுமிலாம லுரைதடுமாறி
சிந்தையு நெஞ்சுமு லைந்து மருண்டு
தடமு மழிந்து மிகவும லைந்து
தேறிந லாதர வேதென நொந்து
மறையவன் வேத னெழுதியவாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்தம்
மேதினி வாழ்வு நிலாதினி நின்று
கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமு நாலுசு வாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வரு நேரமே
வளர்பிறை போல வெயறுமுரோம
முஞ்சடையுஞ் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி யுயிர் பொடு போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து
பழையவர் காணு மெனுமயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்

இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேகவி சாரியுமென்று
பலரையுமேவி முதியவர் தாமி
ருந்தச வங்கழுவுஞ் சிலரென்று
பணிதுகில் தொங்கல் களபமணிந்து
பாவகமே செய்து நாறுமுடம்பை
வரிசை கெடாம லெடுமெனவோடி
வந்திள மைந்தர்கு னிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலையடைந்து
மாணிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி யழல் கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகியெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறுமி லாதவுடம்பை
நம்புமடியேனை யினி யாளுமே.

## தேற்றம்

நேற்றிருந்தார் இன்றைக்கு இங்கே இல்லை
நீள்புவியின் பெருமை இது என்றே உண்மை
சாற்றுகவி வள்ளுவனும் சொன்ன அந்த
சத்தியமாம் வார்த்தையினைச் சரியாய் நோக்கில்
ஏற்றிடுவோம் உண்மை அதே சனித்த பேர்கள்
என்றோ ஒரு நாளுடலம் நீத்தல் திண்ணம்
கூற்றுவனார் வயது குலம் சாதி பேதம்
கொள்வதில்லை என்பதால் அமைதி கொள்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
## திரு. முருகேசு சந்திரகுமார் அவர்களின் உள்ளத்திலிருந்து..

என்னுடைய வாழ்க்கையே என்னுடைய சேதி என்றார் காந்தி ஒருவர் வாழும் முறையே அவருடைய நினைவாக நம்மிடையே பதிகிறது. கூடவே அவர் செய்கின்ற செயல்களின் பயன்கள் பலமாக இருந்தால் அவை காலத்தை ஊடுருவி நீடிக்கும் அந்த நீடிப்பு அவரை நீக்கமற நினைவு கொண்டவாறே இருக்கும் சொற்களையும் விடக் கூடிய பெறுமானம் செயலுக்கே உண்டென்பது இதனால்தான். உருவத் தோற்றங்கள் எல்லாம் ஒன்றிரண்டு தலைமுறைகளுடன் மங்கி விடும் தாமோதரம்பிள்ளை மாசார் என்ற கிராமத்தின் ஒரு அடையாளம் மாசாருக்கு அப்பால் பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் முழுவதிலும் அறியப்பட்ட தாமோதரம்பிள்ளை இந்தக் கலகத்தின் வழியாகத்தான்.

தனக்குச் சரியென்று பட்டதைத் துணிந்து சொல்லும் செய்யும் இயல்பு தாமோதரம்பிள்ளையினுடையது. யாராக இருந்தாலும் தன்னுடைய அபிப்பிராயங்களைத் தயங்காமல் சொல்வார். எவரோடும் துணிந்து பேசுவார். தனக்குப் பிடிக்கவில்லை என்றால் மோதுவார். சில சந்தர்ப்பங்களில் அவருடைய இந்த இயல்பினால் அவர் பிறருடைய கோபங்களையும் எதிர்ப்புக்களையும் கூடச் சந்தித்திருக்கிறார். அச்சந்தர்ப்பங்களில் தன்னுடைய கலகங்களால் அவரே சிரமங்களை எதிர்கொண்டிருக்கிறார் ஒரு கலக்காரனாகச் சமூகத்தில் இயங்குவது என்பது இரண்டு பக்கமும் கூருள்ள வாளைக் கையாள்வதைப்போலக் கடினமானது எந்தப் பக்கத்தாலும் காயங்களும் சேதங்களும் ஏற்படலாம் என்ற நிலையில் மிகக் கவனமாகவே அதைக் கையாள வேண்டும். ஆனால் தாமோதரம்பிள்ளை அவர்கள். சில சந்தர்ப்பங்களில் தன்னுடைய வாளினாலே தானே காயப்பட்டதும் உண்டு. ஆனாலும் அந்த வருத்தமெல்லாம் அவருக்குக் கிடையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்து விடாமல் எப்படியோ இயங்கிக் கொண்டேயிருப்பார். இயங்குவதுதான் அவருக்கு பிடித்தமானது பொதுப்பணிகள் ஆலயத் தொண்டுகள் ஊர் வேலைகள் என்று ஏதாவதொரு இடத்தில் தாமோதரம்பிள்ளையின் குரலைக் கேட்க முடியும். நான் தாமோதரம்பிள்ளையை அறிந்து அன்னுடைய சிறிய வயதில் 1970 களில் மல்வில் கிருஷ்ணன் கோயில் வளாகத்தில் தான் மல்வில் கிருஷ்ணன் கோயிலுடன் பெரும் பிணைப்பு அவருக்குண்டு பின்னர் அரசியல் வாழ்வில் சில காலம் என்னுடன் இணைந்து செயற்பட்டிருக்கிறார்.

இப்படி ஒரு தனிப்பாத்திரமாக வாழ்ந்த தாமோதரம் பிள்ளை ஒரு குறிப்பிட்ட காலம் என்னுடனும் நெருங்கியிருந்தார். பொதுப்பணிகளில் அதீதமான அக்கறையும் உணர்வும் கொண்டிருந்த அவருடைய அழைப்பில் மாசாரில் பல நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கிறேன். அந்தச் சந்தர்ப்பங்களில் இன்முகத்துடனும் சுறு சுறுப்புடனும் அவர் இயங்கிய அந்தக் காட்சிகள் என்மனதில் பசுமையாக உள்ளது. ஆனால் எதிர்பாராத விதமாக அவருடைய நினைவுகளை மனதில் எண்ணி அவருக்கு என் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய குடும்பத்தினருடன் எனது உறவு என்றும் நீடிக்கும் அதுவே அவருக்கு நான் செய்யும் மரியாதையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்முக ஆளுமை கொண்ட நல்ல மனிதர்

பச்சிலைப்பள்ளியின் புகழ்பூத்த நல்ல மனிதர்களில் ஒருவராகதான் வாழும் காலம் முழுவதும் இப் பிரதேச நலனுக்காக உழைத்து பங்கு கொண்டிருந்த திரு. தாமோதரம்பிள்ளை அவர்கள் சற்றும் எதிர்பாராத நிலையில் எம்மைவிட்டு பிரிந்திருப்பது கவலையளிக்கிறது. ஒரு மனிதன் மற்றவரது கவனத்துக்கும் ஆய்வுக்கும் உட்படுகின்றான். என்றால் அது அவனது பன்முக ஆளுமையின் வழிவந்ததாகவே அமையும் தனக்காக வாழுதலும் தனது சுகநலனுமான ஒரு வாழ்முறை கொண்டவர்களை சமூகம் விமர்சிப்பதில்லை. வசுரிப்பதுமில்லை ஆனால் சமூக ஊடாட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ளும் மனிதர்கள்தான் சமூக விமர்சிப்புக்கும் நேசிப்புக்கும் உட்படுகின்றனர். அவர்களால்தான் சமூக தீர்மானங்கள் உருப்பெறுகின்றன.

அவ்வகையில் அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள் ஒரு நல்ல சமூகபங்காளியாக இறுதிவரை பணி செய்தார். அனைத்து நிகழ்வுகளிலும், பங்கு கொள்ளுதல் பயமின்றி கருத்துக்களை முன்வைத்தல் தனது கோரிக்கைக்காக வாதிடுதல் முடிந்தவரை உறுதியாக நிற்றல். தேவைப்படும் போது விட்டுக்கொடுத்து தீர்மான உருவாக்கத்திற்கு பங்குபற்றல் என நல்ல பல தலமை பண்புகளை கொண்டவராக அவர் இருந்தார். சமூகத்துக்காக எதையோ செய்வதில் அவருக்கு இருந்த விடாப்பிடியான ஈடுபாடு அவரை எமது மாவட்டத்தில் பலருக்கு அறிமுகமாக்கியது சிங்களம், ஆங்கில புலமை காரணமாக அவரால் தனது நேசிப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட்டோருக்கு உதவ முடிந்தது. கோரிக்கை கடிதம் எழுதுவதில் அவருக்கிருந்த பலமை பல சமூக தேவைபாடுகளை வெளிக்காட்டுவதற்கு உதவியது. இயற்கைமீதும் மரங்களின் மீதும் அவருக்கு இருந்த அலாதியான விருப்பு பல மரங்களாக இன்று சாட்சி சொல்கின்றன. மாசார் தொடர்பில் அவரால் பேசப்படாத நிகழ்வுகளே இருக்க முடியாது பச்சிலைப்பள்ளியின் முதியோர் சங்க தலைவராகவும் அவர் பணி செய்தார். மாசார் பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சியில் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது.

அறநெறி பள்ளிகளை வளர்ப்பதிலும் பண்பு நிறைந்த ஒரு இளைய தலைமுறையினரை உருவாக்குவதிலும் அவர் காத்திரமான பங்கை இப்பிரதேசத்துக்கு வழங்கியிருக்கின்றார். பச்சிலைப்பள்ளியில் இருந்த ஒரு நல்ல சமூக பங்காளியை இன்று நாம் இழந்து விட்டோம். அவரது வெற்றிடம் ஈடு செய்ய முடியாததே சமூக விதிப்பு என்பதனை ஒற்று நாமும் நிறைவடைந்து அன்னாரின் இழப்புக்கு எனது ஆழ்ந்த அஞ்சலிகளை வரியாக வழங்கி நிறைவடைகின்றேன்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
**உதவி திட்டமிடல் பணிப்பாளர்**
**மாவட்ட செயலகம்**
**கிளிநொச்சி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகானின் தடங்களிலிருந்து நான் அறிந்தவை சில ...

மாசார் மண் பெற்றெடுத்த மகான்களில் தாமோதரம்பிள்ளையும் ஒருவராவார். இவர் என் தந்தையின் நாமம் கொண்டமையினால் இவர்மீது எனக்கு பாசம் இருந்தது. இவர் பலவழிகளிலும் பாடசாலையை வர்ணிப்பதற்கு உதவியிருக்கின்றார். பாடசாலையின் அருகில் அவரது மனை அமைந்திருந்ததனால் பல நிலையான மரங்களை பாடசாலை வளவினுள்ளும் பொது இடங்களிலும் நாட்டி பராமரித்து வந்துள்ளார். இவர் இல்லாவிட்டாலும் அவரது கதையை மரங்கள் சொல்லும்.

அவர் எப்போதும் ஏதாவது பொதுச்சோலைகள் பற்றிய சிந்தனையாளராகவே இருப்பார். பிழை செய்தால் நேரடியாகப் பேசுவார். தன் பேரப்பிள்ளைகளுக்கு நிகராக இருந்து அவர்களை நல்வழிப்படுத்தி உயர்நிலைக்கு கொண்டு வருவதற்காக பாடுபட்டார். திடீரென காதோரம் வந்த செய்தி பொய்யாகிப் போகாதோ என ஏங்கி நின்றோம்.

பாடசாலைக் கட்டடம் புதிதாக அமைக்கும் போதும் மின்சார வேலை நடைபெறும்போதும் சிங்களம் தெரிந்தவர் தேவைப்படும் போது இவரையே நாட வேண்டிய தேவை இருந்தது. அவர் மிகுந்த சந்தோசத்துடன் அவர்களுடன் உரையாடி உடனிருந்து அவர்களுக்கு தேவையான ஒத்தாசைகளை வழங்கினார்.

பாடசாலையை அழகுபடுத்த வேண்டும் சுற்றிவர மதில் அமைக்க வேண்டும் பாடசாலைக்கு தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் போன்ற செயல்களில் எனக்கு ஒத்தாசையாக இருந்தார். இன்னும் சிலகாலம் இருந்திருந்தால் பாடசாலை வளர்ச்சிக்கு உதவியிருப்பார். இதுதான் விதியோ? இதுதான் நீதியோ? விதைத்தவன் வெட்டினான் வேறொன்றும் இல்லை. என எண்ணி தேற்றம் பெறுவோமாக!

அதிபர்
கிளி/ மாசார் அ.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31-ம் நாள் நினைவுரை

ஈழ வளநாட்டில் தமிழர்களின் இதயமாக விளங்கும் வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் மாசார்க் கிராமத்தில் 27.02.1946 இல் அவதரித்து 31.03.2016 இல் இறைவனடி சேர்ந்த அண்ணன் அமரர் சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை அவர்கள் சிறந்த பண்பாளர் நாடடுப்பற்று மிக்கவர், பளை றோ.க.த.க பாடசாலை அதிபராக, பச்சிலைப்பள்ளி பிரதேச மத்தியஸ்தர் சபையின் தலைவராக பணியாற்றும் திரு. வடிவேலு ஜீவரத்தினம் அவர்கள் மூலமாக அறிமுகமானேன். வெள்ளை வெளேரென்ற அவருடைய ஆடை மட்டுமல்ல அவரது உள்ளமும் அவ்வாறானதுதான். மாசார்ப்பகுதியின் பல அமைப்புக்களில் அவர் தலைவராகவும், செயலாளராகவும் இருந்து செய்த சேவைகள், பணிகள் சொல்லிலடங்காது. அவர் தனது கிராமத்திற்கு மாத்திரமல்லாது பளைப்பிரதேசத்திற்கே பல சேவைகளைச் செய்துள்ளார். இதனைவிட தமிழீழத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு தன்னுடைய இரு புதல்வர்களையும் மாவீரர்களாக அர்ப்பணித்துள்ளார். இதன்மூலம் நான் அவருடைய விடுதலை உணர்வை அறிந்துகொண்டேன். அண்ணனுடைய இழப்பானது யாராலும் ஈடுசெய்ய முடியாததொன்றாகும். இத்தேசத்திற்கு அவர் ஆற்றிய சேவையானது சுயநலமற்றதும் அளப்பரியதும் அளவிடமுடியாததுமாகும். எனவே அவருடைய 31ஆம் நினைவு நாளில் அவரது ஆத்மா சாந்தியடைய அவரது குல தெய்வமாகிய மாசார்ப்பிள்ளையாரை வேண்டி நிற்பதோடு அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**சிவஞானம் சிறிதரன்**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்,
மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர்,
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலங்கரை விளக்கு
### தாமோதரம்பிள்ளை அண்ணன்

ஊருக்கு பெருமை சேர்த்தவர் திருவாளர் தாமோதரம் பிள்ளை அவர்கள். அவர் சென்ற இடமெல்லாம் மாசார் தாமோதரம்பிள்ளை என்று அன்பாக அழைக்கப்பட்டார். தென்னை பயிர்ச் செய்கை சபையில் அவர் பணியாற்றிய காலத்தில் நான் சிறுவனாக இருந்தேன். கேபிள் சைக்கிளில் வருவார். கம்பீரமான தோற்றமும், மிடுக்கான நடையும், நகைச்சுவையான பேச்சும், பண்பாக பழகும் சுபாவமும் கொண்டவராக அனைவரையும் கவர்ந்திருந்தார்.

ஆலயத்தொண்டில் ஈடுபாடான இவர் பூசைக்கு வேண்டிய பூக்களை தானே பறித்து ஓலைக்கூடைகளில் எடுத்துவருவார். அதுவும் போதாதென்று தாமரைக்குளத்தில் இறங்கி தன்னால் இயன்றவரை பூக்களைப்பறித்து பூசைக்கு ஒப்படைப்பார். ஆலய சூழலை சுத்தம் செய்து கொண்டு மற்றவர்களையும் அன்பாக அழைத்து தனது செயற்பாட்டிற்கு வலுச்சேர்த்துக்கொள்வார். மல்வில்லில் கிருஷ்ணன் கோவில் மகாகம்சன் போர், திரியாய் அம்மன் கோவில் வைகாசிப் பொங்கல் உற்சவங்களில் முன்நின்று செயற்பட்டவர். மல்வில்லில் “மரநடுகை திட்டத்தினை ஆரம்பித்த பெருமை” தாமோதரம் பிள்ளை அண்ணனையேசாரும். நிழல் மரங்கள், பயன்தரும் மரங்கள் என்பவற்றினை ஆலயவீதியில் நாட்டி கூடு அடைத்து நீருற்றி வளர்த்த முன் உதாரண புருஷர். தனது கடமையின் நிமிர்த்தம் இடமாற்றமாகி முல்லைத்தீவிற்கு சென்றாலும் மாயவனைத் தரிசிக்கத் தவறமாட்டார். மாயவன் மீது கொண்ட பற்று காரணமாக தான் அமைத்த மனைக்கு “திருமால் வாசா” என பெயர் சூட்டினார். கடமை நேரத்தில் காயப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்த பின் தவறாமல் ஞாயிற்றுக்கிழமைகளில் ஊன்று கோலுடன் ஆலயத்திற்கு வருவார். தன்னால் முடியாத காரியங்களிற்கு இளைஞர்களை ஒன்று திரட்டி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம்தான் நினைத்ததைச் சாதித்து விடுவார். அரும் கோடையில் குளம் வற்றி விட்டால் உதவிக்கு ஆட்களைத் திரட்டி குளக்கரையை ஆழமாக்கிவிடுவார். மாடாடு தண்ணீர் குடிக்க வேணும், குளிப்பதற்கு தேவை என தட்டிக் கொடுத்து கச்சிதமாக வேலை வாங்கிவிடுவார். இப்பகுதியில் கத்தாப்பு, நிழற்பூவரசு மரங்களை அறிமுகப்படுத்திய பெருமை அன்பரையே சேரும். திரியாய அம்மன் கோவில் தேர்த்திருவிழாவிற்கு மல்விலின் கேடகத்தினை மாட்டு வண்டியில் ஏற்றி அதனை அலங்கரித்து சிறப்பான தேர்த்திருவிழாவினை நடாத்தியவர். கதிர்காமம் கொடியேறி விட்டால் எந்தப் போக்குவரத்து நெருக்கடி இருப்பினும் மாணிக்க கங்கையில் தீர்த்தமாடச் சென்று விடுவார். மாசியில் மாசார் பிள்ளையார் மகாசிவராத்திரி பங்குனியில் திரியாய் அம்மனில் கூத்து, வைகாசயில் பொங்கல், ஆனியில் திருவிழா, ஆடியில் கதிர்காமம், ஆவணியில் மல்வில் திருவிழா புரட்டாதியில் மானம்பூ, மார்கழியில் வைகுண்ட ஏகாதசி, மாசியில் பீம ஏகாதசி என அடுக்கடுக்காக ஆலய உற்சவங்களுக்கான திட்டங்கள் வகுப்பார். குடும்பத்தில் இழப்புகள் வந்த போதும் குறைவில்லாத சமூக சேவை கிராமமுன்னேற்றச்சங்கம், சனசமூக நிலையம், கமக்காரர் அமைப்பு பாடசாலை அபிவிருத்திச்சங்கம், ஆலயநிர்வாகசபை என பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதியானார். பொதுக்கூட்டங்களில் கணீர் என்ற ஒலி கேட்டால் அது தாமோதரம்பிள்ளை அண்ணன் வந்துவிட்டார். என எடுத்து காட்டும். மல்விலின் கேணித் தீர்த்த திருவிழாவினை சோரன்பற்று கிராமத்திற்கு வழங்குவதற்கு வழி வகுத்தார். வைகுண்ட ஏகாதசியினை சிறப்பாக நடாத்த வேண்டுமென ஆரம்பித்தவர். இடம் பெயர்ந்து மல்விலின் ஐயாவும், அம்மாவும் வந்தால் சுவாமி அறையினை வழங்கி உபசரித்தவர்.

யுத்தசூழலில் மாசாரில் சந்தை அமைவதற்கு அத்திபாரமிட்ட பெருமையும் இவரையே சாரும். சமூக சேவகனாக ஆலோசகனாக, சிந்தைவாதியாக, ஆன்மீகத் தொண்டனாக, விகடனாக பேச்சுவன்மையாளராக, பச்சை மரங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலனாக வாழ்ந்த பெருந்தகை இன்று எம்முடன் இல்லை. என்பதனை நம்பமுடியவில்லை. எளிமையான வாழ்வோடு பல விடயங்களை நாம் கற்பதற்குவழிகாட்டி தந்துள்ளார், விட்டுச்சென்றுள்ளார். அவரின் இழப்பினை ஈடுசெய்யயாருமில்லை. பச்சிலைப்பள்ளியில் ஓங்கி ஒலித்த குரல் இன்று ஓய்ந்துவிட்டது. அன்பரின் ஆத்ம சாந்திக்காக மல்வில் மாயவனை வேண்டுகின்றேன்.

மல்வில், நீங்காத நினைவுடன்..
இயக்கச்சி கண்ணன்

## சிந்தனைக்கு

* செயலே புகள் பரப்பும், வாய் அல்ல
* பொன், பெண், ஆடை இவைகளைப் பகல் வெளிச்சத்தில் தேர்ந்தெடு, நட்சத்திரங்கள் கூச்சல் இடுவதில்லை
* சொந்தக் குழந்தை இல்லாதவன் மிகவும் அபாக்கியவான்
* தூக்கி எறியும் குதிரையைவிட சுமந்து செல்லும் கழுதை மேலானது
* தேன் இனித்தபோதிலும் அதை முள்ளோடு ஏற்காதே
* பணம் பேசுகின்றது நாய்கள் குரைக்கின்றன
* பேராசை முடிகின்ற இடத்தில் மகிழ்ச்சி தொடங்குகின்றது
* நண்பர்கள் இல்லாதபோது உன் கைத்தடியுடன் கலந்து ஆலோசனை செய்
* வெற்றியின் போதுகை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம்
* நீ யாருக்காகவும் கண்ணீர்சிந்தாதே உன் கண்ணீருக்கு தகுதியானவர்கள் உன்னை அழ விட மாட்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் நினைவுகளில்

அமரர் சோமசுந்தரம் - தாமோதரம்பிள்ளை அவர்கள் மாசார் கிராமத்துக்கு மட்டுமன்றி பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் அனைவரதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் முன்னின்று உழைத்த உத்தமர் ஆவார். பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப்பேரவை ஆரம்பித்த நாள் தொடக்கம் இதன் அங்கத்தவராகவும் மத்திய குழு உறுப்பினர் ஆகவும் கௌரவ சேவையாற்றி வந்துள்ளார்.

பேரவையால் வழங்கப்படும் உதவித்திட்டங்கள் சரியான முறையில் பொருத்தமானவர்களுக்கு கிடைக்கச்செய்வதிலும் முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற போஷாக்கு உணவுக்கான மேற்பார்வைப்பணிகளிலும் அவர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. இவரது சொல்வன்மை, துணிச்சல் மிக்க செயற்பாடு, இறைதொண்டு, கடின உழைப்பு, கம்பீரமான தோற்றம் என்பன அனைவரது மனதிலும் நீங்காத இடத்தைப்பிடித்து நிற்கின்றது.

அன்னாரது இழப்பு பச்சிலைப்பள்ளிப்பிரதேசத்துக்கு பேரிழப்பாகும். இவரது பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மாசார் விநாயகப் பெருமானை வேண்டி இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்

தலைவர், உறுப்பினர்கள்

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச்சங்கம் (பேரவை)

பளை, லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரக் காணிக்கை

27 ❋ 02 ❋ 1946



31 ❋ 03 ❋ 2016

மாசார் பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது பாடசாலையின் கல்விசாரா பணியாளர்

திரு. த. வடிவேலு அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

### அவர்களின் திடீர் மரணத்தையொட்டி சாற்றும் கண்ணீரப் பாக்கள்

ஓடி ஓடி ஊருக்காய் உழைத்த உத்தமரே
தேடிவந்து உதவும் தெய்வமனம் கொண்டவரே
நாடிவந்தவர்க்கெல்லாம் நலம்பல தந்தவரே – இன்று
எம்மை வாடி வதங்க விட்டு எங்கு சென்றீர்களோ!

எடுத்தோர் கருமம் முடிக்காமல் விடமாட்டீர்
எச்சபை என்றாலும்எழுந்துநின்றுகுரல்கொடுத்திடுவீர
பச்சிலைப்பள்ளியின் உயர்ச்சிக்காய் பாடுபட்டீர் – இன்று எம்மை
பாதியிலே தவிக்கவிட்டு பாருலோகம் சென்றதேனோ!

வீரமண் மாசார் விளைந்த எம் ஐயாவே – உம்பிரிவால்
வீழிநீர் சொரிந்து ஊரே அழுகின்றதையா
உந்தன் உறவுகள் துயர்துடைக்க எங்கள்
கண்ணீரால் காணிக்கை செய்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்தம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கிளி/வேம்போடுகேணி, சி.சி.த.க.பாடசாலை
இத்தாவில், பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

27 ❋ 02 ❋ 1946



31 ❋ 03 ❋ 2016

## அமரர் சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தில்
எம்முடன் இருந்த காலம்
துணிச்சலான ஆலோசனைகள் வழங்கிய
அமைதியான புன்சிரிப்பும்
ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு
கனிவுமொழி பேசும்
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகைபூத்தபொன்முகமும் மறைந்ததேனோ?
கண்களெல்லாம் கடலாய்ப் பொங்க
கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?
அமைதியாய் மரணத் திரையினிலே
மௌனமாய் மறைந்ததேனோ?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்தம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

முல்லையடி, பளை
03.04.2016

பச்சிலைப்பள்ளி
அபிவிருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



27 * 02 * 1946

31 * 03 * 2016

எமது ஆலய நிர்வாகத் தலைவர் மாசார் பளையைச் சேர்ந்த

## அமரர் சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

ஊர்போற்றும் உத்தமராக
உற்றாருக்கு நல்வழிகாட்டியாக
ஆலயத்திற்கு நற்தொண்டனாக
மாசாருக்கு கொடைவள்ளலாக

முதுமையிலும் தளர்ந்திடாமல்
இறைவன் தாள் பற்றி பணிந்து
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
நல்முக்தியை அடைந்தீரோ
நன்நாளில் .......

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்தம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கழிக்கரை கல் ஒழுங்கை
வைரவர் ஆலயத்தினர்

மாசார்,
பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரக் காணிக்கை

27 ❋ 02 ❋ 1946



27 ❋ 02 ❋ 1946

## அமரர் சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

(மாசார், பளை)

நேற்றுவரை நீர் பேசிய வரிகள்
காற்றுள்ளவரை கரையாது - எம்
பிரதேசத்தின் உன்னத பயணத்தில உம் தடம்
காரிருள் கை விளக்கு போன்றது ஐயா!
பிறந்தார்க்கு இறப்புண்டுநிச்சயம் ஆனால்
மறவாது இவ்வுலகம் உமை. என்றும்
கரையில்லா உங்களின் அன்பு மறுபிறப்பிலும்
கிடைத்திட வேண்டும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்தம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கிராம அபிவிருத்திச் சங்கம்


மாசார், பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

27 02 1946



27 02 1946

(எமது கிராம சமூகத்தொண்டர்
மாசார் பளையைச் சேர்ந்த)

## அமரர் சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை அவர்கள்

**மண்ணிலே எழிலாய் வாழ்ந்த**
**மகிமையாம் ஐயா - இன்று**
**கண்ணிலே நீரை ஈந்து**
**கடவுள் தாள் அடைந்திட்டீரோ!**
**வண்ணமாம் உங்கள் நாமம்**
**வையகம் வாழும் - நாங்கள்**
**எண்ணத்தில் உம்மை வைத்து**
**ஏத்துவோம் அமைதி கொள்க!.**





அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்தம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வாணன்பதி அம்பாள்
ஆலயத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

27 ❋ 02 ❋ 1946



31 ❋ 03 ❋ 2016

## அமரர் சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை அவர்கள்

**மாசார், பளை**

மாசற்ற எங்கள் மாசார் மண் பெறற் மகத்தான அண்ணனே!!!
மண்ணுலகில் உந்தன் சேவை முடிந்தது என்றோ...
மாயம் செய்யும் காலனவன் மயக்கம் தந்து மன்னவனைக்
கவர்ந்தானோ?
வீதியெல்லாம் மரம் நட்டாய் விதியாரைத்தான் விட்டது.
பாதை மரம் வளர முன்பே பா(தி) தையிலே சாய்ந்தாயோ?
எம்மவர்க்கு நிழல் தந்த நீ ஒதுங்க நிழலின்றி தவித்தாயோ
அண்ணா!!!
மனித நெயத்திற்கு சித்து விளையாட்டா?
இது யார் செய்த குறற்ம் விழி முடித்துயிலும் அண்ணனே!!!
விழி நீரில் கரைகின்றோம்
விழித்து பாராயோ???
விரைந்தோடி வாராயோ???

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவா குடும்பம்
தேராவில், விசுவமடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரக் காணிக்கை

27 ❋ 02 ❋ 1946



31 ❋ 03 ❋ 2016

எமது முன்னாள் தலைவரும் சமூகத் தொண்டருமாகிய
மாசார் பளையைச் சேர்ந்த

## அமரர்
## சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை
## அவர்கள்

சொந்தங்கள் சிறகடித்த சோலையிலே
சோகத்தை நிரப்பிச் சென்றதும் ஏனோ?
நிங்கள் தேடிய சொந்தங்கள் எல்லாம்
உங்களைத் தேடி வாடுதையா
உங்களை இழந்து தவிக்கும் உறவுகளுக்கு
ஆறுதல் தான் இனியாரோ?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்தம சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மாசார்,
பளை.

மாசார் பிள்ளையார் ஆலய
பரிபாலனசபையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

27 ❋ 02 ❋ 1946



31 ❋ 03 ❋ 2016

எமது பாடசாலை மாணவர்களான
மு. தினேகா, மு. பவனிதன், மு. கீர்த்திகா, வ. தேனிலவன்
ஆகியோரின் பாசமிகு பேரனார்

## அமரர் சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

நேற்று நாம் அறிந்த செய்தி
நிஜமாக இருக்கக்கூடாது என எண்ணினோம்!
நிஜம் என்று நிர்ணயம் செய்தபோது
மிகுந்த துக்கத்திலாழ்ந்தோம.
கிடைக்கப்பெற்ற மனிதப்பிறவியே - உலகில்
உயர்வானது முதன்மையானது!
படைக்கப்பட்ட இதனோடு
நற்பண்பு, பணிவு, சமூக இசைவாக்கம் உள்ளிட்ட
பணியியற் கோலங்கள் இணைந்தால்
அது பாரில் பெருமைக்குரியது.
நல்வாழ்வு வாழ்ந்து வந்தபோதும்
அவசரமாய் விரைந்ததேனோ
இன்னும் செய்யவேண்டிய கடமைகள் நிறைய இருக்கின்றனவோ!
அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
கிளி/மாசார் அ.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்களும் கண்டு பிடித்தவர்களும்

| | |
|---|---|
| அச்சு இயந்திரம் | - ஜோன் கற்றன் பேக் |
| தபால் தலைப்புக்கள் | - சேர் றோலண்ட் |
| வெடி மருந்து | - சீனர் |
| திசையறி கருவி | - சீனர் |
| மின்குமிழ் | - வாங்முயர் |
| உருக்குக் கதிர் | - றோன்று ஜேன் |
| புகைப்படக்கருவி | - எல் மாதரே |
| டீசல் இயந்திரம் | - டீசல் |
| தொலைக்காட்சி | - ஜோன் லோஜி பெயாட் |
| ஊற்றுப்பேனா | - ஓவாற்றமன் |
| டைனமோ | - மைக்கல் பரடே |
| டைனமற் | - அல்பிரட் நோபல் |
| தொலைநோக்கி | - கலிலியோ கலிலி |
| துவிச்சக்கரவண்டி | - கேர்க் பற்றிக் மக்மில்லன் |
| குருதிச்சுற்றோட்டம் | - வில்லியம் ஹார்வே |
| இன்சுலின் | - சேர்.எல்.பான்சிங் |
| உடலொலிபெருக்கி கருவி | - லைநெக் (ரெலஸ் கோப்) |
| முதற் புகையிரதம் | - ஜோர்ஜ் ஸ்ரீபன்சன் |
| மயக்க மருந்து | - சேர்.ஜேம்ஸ் சிம்சன் |
| அம்மை நோய் தடைப்பால் | - எட்வேட் ஜேனர் |
| சிறுபிள்ளை வாத மருந்து | - சோக் |
| விசர்நாய்க்கடி மருந்து | - லூயி பாஸ்டர் |
| தட்டச்சு இயந்திரம் | - லோரல்ஸ் |
| மேக்கரி உஷ்ணமானி | - பரநீற் |
| புவியீர்ப்புக் கொள்கை | - நியூட்டன் |
| வது தொலைக்காட்சி ஒளிபரப்பு | - ஜோன்லோஜி பெயார்டப் |
| X கதிர்களைக் கண்டுபிடித்தவர் | - வில்லியம் றொன்ஜின் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பழைய பெயர்கள் | புதிய பெயர்கள் |
|---|---|
| செங்கடகல | கண்டி |
| கஜரகம | கதிர்காமம் |
| கலாதித்த | களுகங்கை |
| காயத்துறை | காங்கேசன்துறை |
| சிங்ககிரி | சிகிரியா |
| தம்புகோள | தம்புள்ள |
| புலத்திநகர | பொலநறுவை |
| ஜம்புகோளம் | காங்கேசன்துறை |
| மகாதில | மாத்தளை |
| சுபப்பத்த | யாப்பகூவா |
| மணிவிர | மின்னேரியா |
| ஜிம்கதித்த | ஜின்தோட்டை |
| பதிவாப்பி | பதவியா |
| கங்கசிரிபுர | கம்பளை |
| கொத்தசார | கொட்டியாரம் |
| ஜயவர்த்தனபுர | கோட்டை |
| கலாவத்தை | சிலாபம் |
| ஜம்தேபணி | தம்பதெனியா |
| பியங்குதீவு | புங்குடுதீவு |
| மாகம | மிகிந்தலை |
| யாப்பாப்பட்டுண | யாழ்ப்பாணம் |
| லஸகாப்பத்த | லக்கல |
| தம்பகமுவ | தம்பலகாமம் |
| சிங்கைநகர் | நல்லூர் |
| ஆகாசகங்கை | அம்பன்கங்கை |
| கல்கநதி | கல்லோயா |
| கோணநதி | கலாஓயா |
| கல்யாணிநதி | களனிகங்கை |
| குடிகந்தநதி | கும்புக்கன்ஓயா |
| ஜஜ்ஜர நதி | தெதுறுஓயா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் ,
அது வேறொருவருடையதாகும்".



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிங்ஸ் பதிப்பகம் - 0212050495